අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'இසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/ 01 /11 /04/10-2023
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:
දිනය / திகதி / Date: 2023.04.18

**சுற்றிக்கை இலக்கம் 16/2023**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பிரிவெனாதிபதி தேரர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்

## ஸ்ரீ புத்த வருட 2567 ஆவது வெசாக் வாரம்

2023 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி இடமபெறும் ஸ்ரீ புத்த வருட 2567 ஆவது வெசாக் வாரம் தொடர்பிலான அரச வெசாக் விழா 2023.05.04 மற்றும் 05 ஆம் திகதி புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் மாதம்பை கெபெல்லாவல ஸ்ரீ ரத்தனசிறி பிரிவெனா விஹாரையில் நடாத்துவதற்கு புத்த சாஸன அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

2023.05.02 ஆம் திகதி முதல் 2023.05.08 ஆம் திகதி வரை (இரண்டு நாட்களும் உட்பட) "வெசாக் வாரம்" நிகழ்ச்சி உரிய பாடநாலைகள், கல்வியியற் கல்லூரிகள், பிரிவெனாக்கள் மற்றும் ஆசிரிய கலாசாலை வளாகங்களில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த வெசாக் வாரத்திற்குள் செயல்படுத்துவதற்குரிய உத்தேச மாதிரி திட்டம் கீழே கொடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த நிகழ்வுகள் உரிய பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவகங்களில் பொருத்தமான முறையில் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் அறியத்தருகின்றேன்.

**இம்முறை வெசாக் வாரத்திற்கான தலைப்பானது,**

**"அவஜ்ஜே வஜ்ஜமதினோ-வஜ்ஜே வதவஜ்ஜதஸ்ஸினோ
மிச்சாதிட்டிசமாதானா-சத்தா கச்சத்தி துக்கத்திங்"
சரியானதை தவறாகவும் தவறானதை சரியானதாகவும் காண்பது துயரத்திற்கான காரணமாகும்"**

.உத்தேச வெசாக் வாரத்தின் மாதிரி நிகழ்ச்சித் திட்டம்

| திகதி | தலைப்பு | உத்தேச செயல்பாடுகள் |
|---|---|---|
| 2023 மேமாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை | "நிலையான சூழலுக்காக பௌத்தம்"<br>சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டங்கள் | புத்த பெருமானின் போதனைகளின் அடிப்படையில் சுற்றுச்சூழலுக்குகந்த குழுவினை உருவாக்குவதற்காக சுற்றுச்சூழலின் மதிப்பினை மாணவர்களுக்கு புரியவைத்தல் மற்றும் "பௌத்தமும் சுற்றுச்சூழலும்" என்ற தலைப்பில் விரிவுரைகள், செயலமர்வுகளை நடாத்துதல், சுற்றுச்சூழலை பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை செயல்படுத்துதல், பாடசாலைகள், நிறுவனங்கள் வழிபாட்டுத் தளங்கள், வீடுகள் சுற்றிலும் சுத்தம் செய்தல் மற்றும் வெசாக் விளக்குகளை (மெழுகுத்தாள்களை பயன்படுத்தமால்) அலங்கரித்தல்<br>"விழிப்புணர்வு தியானங்களை" நடாத்துதல். |
| 2023 மேமாதம் 03 ஆம் திகதி புதன்கிழமை | "சில் வாசனையுடன் தொடர்ந்து புண்ணியத்தைத் திரட்டு" | ஆன்மீக வயர்ச்சிக்காக மாணவர்களுக்கு தியான நிகழ்ச்சிகளை நடாத்துதல் "விழிப்புணர்வு தியானம்" நிகழ்ச்சிகளை நடாத்துதல் |

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister: +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary: +94112784811, +94112785162

| | | |
|---|---|---|
| மேமாதம் 04 ஆம் திகதி வியாழக்கிழமை | **"ஆரோக்கியமான வாழ்விற்கு புத்த மதம்"** | ஊடல் நலம் மற்றும் உள ஆலோக்கியத்தின் மதிப்பினை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல், நச்சுத்தன்மையற்ற உள்ளூர் உணவு பயிர்களின் சாகுபடி மற்றும் நுகர்வை ஊக்குவித்தல் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடாத்துதல். வுராாந்த விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல் |
| மேமாதம் 05 ஆம் திகதி வெள்ளக்கிழமை )புரண வெசாக் பௌர்ணமி போயா தினம்) | **"உடல் வாசவரம் ஒரு முத்திரையாகும்"** (**காய வாச்சானங் சமோதனங் சீலங்**) | அருகில் உள்ள விஹாரைக்கு சென்று சில் அனுட்டானங்களை மேற்கொள்ளுதல், தர்ம போதனைகள் மற்றும் தியானங்கள் போன்ற கொள்கை ரீதியான பூஜைகளில் பங்கேற்பது மற்றும் சில் அனுட்டானங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி புரிதல் |
| மேமாதம் 06 ஆம் திகதி சனிக்கிழமை | **"பௌளத்தத்தால் போஷிக்கப்பட்ட உள்நாட்டு கலை"** | பண்டைய பௌத்த கலைகள் மற்றும் கைவினைப்பொருட்கள் தொடர்பான சிறந்த புரந்துணைர்வை பெற்றுக்கொள்வதற்காக தங்கள் வீட்டிற்கு அருகாமையில் உள்ள பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று அவற்றின் புனிதப் பொருட்கள் மற்றும் பழங்கால கலைப்படைப்புகளை அவதானித்து அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டல் |
| மேமாதம் 07 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை | **"பௌத்தத்தால் போஷிக்கப்பட்ட சிங்கள் இலக்கியம்"** | பக்திப் பாடல்களைப் பாடுதல், பௌத்த நாடகங்களை நடாத்துதல், அழகியல் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல், பௌத்த தத்துவத்தின் அடிப்படையிலான இலக்கியங்களைப் பற்றி பாடசாலைகளை அறிவூட்டுதல் மற்றும் மாணவர்களை இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடாத்துதல், தர்ம போதனைகள் மற்றும் தியான நிகழ்ச்சிகளை நடாத்துதல் |
| மேமாதம் 08 ஆம் திகதி திங்கட்கிழமை | **"விழுமியங்களை ஊக்குவித்தல்"** | பௌத்தம் மற்றும் அதன் பழக்கவழக்கங்கள் மற்றும் விழுமியங்கள் தொடர்பான புரிதலை வழங்குதல் மற்றும் மாணவர்களிடையே ஆண்மீகத்தை வளர்ப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.<br><br>போதைப்பொருள் மற்றும் புகைப்பிடித்தல் தடுப்பு திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் சுகாதார நிலையங்கள் மற்றும் முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றில் சமூக பாதுகாப்பு திட்டங்களை ஏற்பாடு செய்தல் |

மேற்படி வெசாக் வாரத்தில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது தாபன ரீதியாக வசதிக்கு ஏற்றவாறு திகதிகள் மற்றும் நேரங்களை பயன்படுத்தலாம். எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பௌத்த மததிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் காட்சிகள், விளையாட்டுக்கள் மற்றும் அவ்வாறான கேளிக்கை நிகழ்ச்சிகளை தவிர்க்க வேண்டும். மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்திற்கிடையில் மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையில் பணியாற்றுவது அதிபர்கள் அற்றும் நிறுவன அதிகாரிகளின் பொறுப்பாகும் .

எம்.என் ரணசிங்க
செயலாளர்
பிரதிகள்:

1. சனாதிபதி செயலாளர் -சனாதிபதி செயலகம்
2. செயலாளர் - புத்த சாசன, மத கலாசார அலுவலகள் அமைச்சு
3. செயலாளர் - அறநெறி பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார கல்வி இராஜாங்க அமைச்சு

(1–3) – த.அ.கொ

4. கல்வியியற் கல்லூரி ஆணையாளர்-சகல கல்வியியற் கல்லூரிகளையும் அற்வுறுத்துவதற்காக மற்றும் - தே.ந.எ
5. தேசிய பாடசாலை கல்விப் பணிப்பாணர் - தே.ந.எ.
6. பிரிவொனாக் கல்விப் பணிப்பாளர் சகல பிரிவெனாக் கல்வி நிலையங்களையும் அறிவுறுத்துவதற்காக - மற்றம் தே.ந.எ.